



ஓலை 118| ஓசை 241| ஏப்ரல் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்

## பொருள்

பலரும் கேட்டு வெறுக்கப், பயனற்ற சொற்களைச் சொல்லுபவன், எல்லாராலும் இகழப்படுவான்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி



**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## சையொத் திருந்தால் ஐய மிட்டுண்!

பா வகை : நேரிசைப் பஃறொடை வெண்பா




வறண்டே பசித்த வயிறாக வானம்
வறண்டதைக் கண்டுவள மாரி - வறட்சியை
நீக்கிடவே உப்புடை நீர்செல்வம் ஆழ்கடல்
நீக்கி வழங்கிடும் நீள்மனமாய் - ஆக்கமுடன்
மண்ணுயிர் வாழ வழங்கும் மழையாகத்
தண்ணீரை மொத்தம் தனக்கென - எண்ணிடாமல்
வாரி மலையருவி மாண்புடன் ஆற்றிலிட்டே
ஊரிலுள்ளோர் வாழநீர் ஊட்டுதலாய் - பேரியக்கப்
பண்பாட்டைப் பாங்குடனே பைந்தமிழர் போற்றியேதான்
உண்டதுபோல் வேற்றார் உலகிலுண்டோ? - கண்டறிந்தே
எந்தமிழாப் பகிர்ந்துண்டே என்றும் விருந்தோம்பல்
இந்நிலத்தில் காண லினிது




இலக்கணக் குறிப்பு:

இரண்டடிகளுக்கும் ஒரெதுகை வரும். இரண்டடிக்கோர் தனிச் சொல் பெற்று வரும். ஒவ்வொரு அடியிலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனை வரும். அதிகபட்சம் பன்னிரண்டு அடிகளில் முடியும். வெண்டளை சீருக்கு சீர் அமையும். வெண்பாவின் ஈற்றடி மூன்று சீர் வந்து ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். குற்றியலுகரம் பார்க்க வேண்டும். முழு விளக்கம் வெண்பாவிலக்கண யாப்பில் காண்க.

நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்

## மண்டில வெண்பா

உடலின் உரமே உழைப்பால் வருமே
உடற்றியே சேர்க்கும் உடைமையே நன்றாம்
உடம்படச் செய்யும் உழைப்பே உயிர்ப்பாம்
உடலுதல் வேலை உடலுக் கழிவு.



கவிஞர் செ. கலைவாணி



அகர முதல

# அவதாரம்

கை தொட்டுத்
தடவிப் பார்க்கிறேன்
விதைக்கு வெளியே
என் விரல்களுக்குத்
தட்டுப் படுகிறது.
இலைகள் கிளைகள்
பூக்கள் காய்கள்
கனிகளென விதையின்
அத்தனை அரிதாரங்களும்
அவதாரங்களும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# வீறுகொள் மறவேல்

பா வகை: சவலை (நொண்டி) வெண்பா

துணிவுமே கொள்வாய் துயிலும் களைவாய்
பணிந்திடா பண்புடன் பாரில்
அணியாய் நடந்தே அறமதைக் காப்பாய்
மணியாய் வளர்வது மாண்பு

வீறுமே கொண்டால் விடியல் பிறந்திடும்
பேறாய் மறவம் பெறவே
செருக்குடன் நாளுமே செல்வாய் உலகில்
கருத்துடன் வாழ்தல் கனிவு

அச்சம் தொலைத்துமே ஆற்றலும் கொண்டிட
உச்சம் பெற்றிடும் உன்வாழ்வும்
எச்சமாய் நற்குணம் என்றும் மரபுவழி
மிச்சமாய் தந்துமே மீள்

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# ஏலியன்?

ஆயிரம் பூச்சிகள் பறக்கின்றன
அனுதினம் கிழி படுகிறேன்
இதுகூட தெரியாதா?
இன்னுமா கற்றுக் கொள்ளவில்லை?

கேள்விகள் கொடுக்குகளாய்
பெருநகர கல்லூரியில் சேர்ந்திருக்க கூடாதோ?
இந்நரகத்திலிருந்து மீள்வேனா?
நாகரீகம் என்ற பெயரில் அநாகரீகம்

உதட்டுச்சாயம் போடாதவள் நான் மட்டும் தான்
பாதி உடலை பந்தி வைப்பது தான் நாகரீகமாம்
தாய்மொழியில் பேசுவது அநாகரீகம்
கூந்தலுக்கு எண்ணெய்...மூச்!


சைக்கிளில் வந்தால் ஏழை
ஆடை சுழற்சி அடிக்கடி எனில் முகஞ்சுளிப்பு
குதிகால் உயர செருப்பில் குதிரை போல்!?
ஸ்மார்ட் போன் இல்லாமல்...?

மடிக்கணினி பயன்பாடு தெரியாது?
சமூக வலைத்தளங்களில் ஸ்டேட்டஸ்?
நுனிநாக்கு ஆங்கிலம்
காஃபி ஷாப்பில் மணிக்கணக்கில்

புத்தகம் வாசிப்பது குற்றம்
புத்தகத்தில் வாசிப்பது பெருங்குற்றம்
உனக்கு சமைக்க தெரியுமா?
ஐ கேன் ஹீட் வாட்டர் யார்?

அரிசியாகவே முளைக்குமா?
நெல் எப்படி இருக்கும்?
ஐ வில் கூகுள் இட்
மரத்திலா? செடியிலா?

மாதாமாதம் வருமா விலக்கு?
டோண்ட் யூ ஹேவ் பாய் பிரண்ட்?
ஹௌ ஈஸ் இட் பாஸிபிள் யார்
ஃபன்னி நோ...?



கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

6.கேமசரியார் இலம்பகம்



மாசிலாள் மகள் பிறந்த அன்றே
வாசித்து இவள் சாதகம் கணிக்க
ஆசிரிய கணிதர்கள் வந்து குழுமினர்
நீசக்கிரகங்கள் சேர்க்கை ஆராய்ந்தனர் .
( நீசக்கிரகம் : இராகு கேதுக்கள் )
சுபத்திரன் ஆர்வம் கணிதரிடம் வினவினான்.
''சுபமுகூர்த்தம் மணாளன் சங்கதி எப்படி?'
விபகாரமான பேரழகனே மணமகன், ஆனால் ,.
நிபந்தனை என்றால் ஒன்று உண்டு

இந்தப் பெண்ணின் சாதகம் அபூர்வமானது
எந்த அழகனைக் கண்டு நாணுகின்றாளோ
அந்த அழகனே இவள் மணாளன் ஆகுவான்
சிந்தனைச் சிற்பி உலகநாயகன் வருவான்.

ஒரு பிடியில் அடங்கும் இடையாள்
விருப்பம் ஊட்டும் பொன்மணி மாலை
திருமகனைக் காணுதற்கு தினம் காத்திருந்தாள்
அருமை மகளுக்காக பெற்றோர் காத்திருந்தனர்

பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன என்க .
இன்னும் கேமசரி நாணமுற்றாள் இல்லை
அன்னை நிப்புதி மிகவும் வருந்தினாள்
தன் மக்களுக்கான திருமணம் எப்போது?

சுபத்திரன் வருபவரை வீட்டுக்கு அழைத்தான்
சுபமான அந்த நாள் வந்துவிடாதோ
சுப முகூர்த்தம் இல்லாமலே போய்விடுமோ
அபலை கேமசரிஉடல் மெலிந்தாள்

ஆலமரத்தடியில் சுபத்திரன் சீவகனைக் கண்டான்
மாலனைப் போல் கம்பீரமாக இருந்தான்
பாலசூரியன் பிரகாசம் முகத்தில் தெரிந்தது
காலதாமதம் இன்றி சீவகனை அழைத்தான்
( மாலன்: திருமால், பாலசூரியன்: உதயசூரியன் )
நாண்மதி கேமசரி சீவகனைக் கண்டதும்
நாணுற்றாள் வாழ்க்கையில் முதன் முறையாக
காணுற்ற பெற்றோர் உள்ளம் பூரித்தனர்
தாண்டவம் ஆடினர் மனதுக்குள் இருவரும்

'தெய்வ மகளோ மானிட மகளோ'
ஐயுற்று அவளைக் காமுற்றான் சீவகன்
கையும் களவுமாக இருவரும் ஒன்றாயினர்
வையகம் அதிர திருமணம் நடந்தது .

இரண்டு திங்கள் இரவும் பகலும்
புணர்ச்சித் தொழிலின் அழகை நுகர்ந்தனர்
உணர்ந்தான் கடமையை காணாமல் போனான்
இருண்ட உலகில் கணவனைத் தேடினாள் .
(கேமசரியார் இலம்பகம் முற்றிற்று )
(மொத்தம் செய்யுள் 1556 )

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# மனத்துக்கண் மாசிலன் ஆதல்

குற்றமில்லாது வாழ்ந்திடு
குவலயத்தில் சிறந்திடு
மனதால் எவருக்கும்
தீங்கு நினையாதே
மெய்யுரைத்து அன்பால்
அரவணைத்து ஆதரித்திடு

பொய்யுரை தேவையில்லை
பொல்லாங்கு வந்திடுமே
தற்பெருமை கொள்ளாதே
தடம்மாறி செல்லாதே
உள்ளத்தில் உவகையோடு
உண்மையாய் நடந்திடு

நடிப்பு தேவையில்லை
நாணயத்தை வளர்த்திடு
ஆடம்பரம் தவிர்த்து
ஆளுமையை வளர்த்திடு
தற்புகழ்ச்சி வேண்டாமே
தடுமாற்றம் உண்டாகுமே

எந்நிலையிலும்
தரம் தாழ்ந்து போகாதே
மனத்துக்கண் மாசிலன் ஆதல்
வள்ளுவனின் கூற்றை
இதயத்தில் இருத்திடு

அறம் பொருள் இன்பம் வீடு தேடி வரும்
வீண்புகழ்ச்சிக்கு மயங்காதே
வீணர்களை வீழ்த்திடு
குற்றசெயல்தனை நெஞ்சத்தில்
இருந்து நீக்கிடு
பண்பாடு மாறாது
பகுத்தறிவை மனதில்கொள்



பகட்டை மறந்து
நேசத்தை வளர்த்திடு
புவியும் கொண்டாடும்
புகழும் வந்தடையும்
இனிமையை வளர்த்திடு
இன்பத்தை நுகர்ந்திடு

கார்மேகமாய் பொழிந்திடு
காலமெல்லாம் வாழ்ந்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# உன்னத உயிர் மொழி!

உயிர் மூச்சாக
உள்ளத்தின் உணர்வுகளை..
உலகை ஆளும்
உன்னத மொழி

கல் தோன்றி
மண் தோன்றா
காலத்தில் உருவான
காலக் களஞ்சியம்.




சிக்குமுக்கு கல்லில்
சிலீர் குளிரடங்க
சிக்கலான தீமூட்டிய
சீறிய காலத்தே.

சிற்பமாக வடித்த
சிங்கார வரைபடமாய்
சின்னங்கள் கொண்ட
சிங்கத்தமிழ் மொழி.


எங்கும் வாழும்
எம்மவர் விடியலில்
எழில் கொஞ்சும்
ஏற்றமுள்ள தேவதையாய்.

வாழ்வாங்கு வாழ
வாழ்த்துக்கள் சொல்லி
விண்ணில் புகழ்
கொடிகட்டிப் பறக்கிறதே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# சித்திரை பிறந்தது

சித்திரையோடு வண்ணம் தந்தவளே வா
உன் வருகைக்காக காத்து இருந்தோம்
வாசலில் வண்ணக் கோலம் விதவிதமாக
மாவிலைத் தோரணங்கள் உன்னை அழகாக்க
பெரியவர்கள் ஆசீர்வாதம் கிடைக்க கையில்
புதிய ரூபாய்க்காக காத்து இருக்க
கிடைத்த மகிழ்ச்சியில் உள்ளம் பூரிக்க
மஞ்சள் பூக்கள் பூத்து குலுங்க
அதிகாலையிலே இறைப் பற்றோடு எழுந்தருள
கோயில்களுக்கு சென்று இறைவனை வழிப்பட
சொந்த பந்தங்களோடு உறவாடி மகிழ
இனிப்புகளை பகிர்ந்து உண்டு
மகிழ்வு பொங்க கவலை மறந்து
புத்தரிசி புது நெல்லோடு சமைக்க
வடை பாயசத்தோடு உணவு பரிமாற
பகிர்ந்துண்டு பல கதை பேசி
சித்திரை செல்வம் பெருக என்றும்
முத்திரை பதித்து நன்மைகள் சேர
எங்கும் மங்கலம் பெருக தமிழ்மகள்
தரணியில் கால் பதித்த நொடி
செல்வங்கள் எல்லாம் ஒன்றாய் சேர்ந்து
மங்காத வாழ்வும் நோய் நொடியில்லாமல்
வளமோடும் நலமோடும் பல்லாண்டு வாழ
சித்திரையை வருக மகிழ்ச்சியை தருக




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# நன்றியில் செல்வம்

## அதிகாரம் : 101


நன்றியில் செல்வம்

எத்தனை பொருள்சேர்த்திடினும்
கஞ்சனாய் தானுமுண்ணாது.
உரிமையும்போற்றா வாழ்வோன்
செத்தவனுக் கொப்பாவான்.

செல்வத்தால் சகலமுமுண்டாகும்
என்றறிந்தும் எவர்க்குமீயாது.
இறுகப்பற்றிய மயக்கமுடையோர்க்கு
பேய்ப்பிறவியே உண்டாகும்.

செல்வம் சேர்த்தலொன்றே
விரும்பி புகழ்விரும்பாதோர்.
பிறந்துவாழ்தல் இப்புவிக்கு
சுமையேயன்றி வேறில்லை.

பொருள் ஈந்தறியாதோன்
எவராலும் விரும்பப்படான்.
இறப்பின்பின் எஞ்சிநிற்பது
ஏதென் றெண்ணுவானோ!?

தன்நுகர்வுடன் பிறர்க்குமீந்திடும்
செல்வத்தின் பயனிழந்தோர்க்கு.
மென்மேலும் பெருக்கெடுக்கும்
பொருளுண்டாயினும் பயனிலவாம்.

தானும்நுகராது தகுதியுடையோர்க்கு
கொடுத்துதவும் பண்பிலாதோன்.
தான்பெற்ற பெருஞ்செல்வத்திற்கு
கொடும் நோய்போன்றோனாம்.

வறியோர்க்கு உதவாதோனின்
செல்வம் அழகுநங்கையொருத்தி.
திருமணப்பயனின்றி வாழ்ந்து
முதுமையுற்றார் போன்றதாம்.

வறியவர்க்கு அணியாயிருந்தும்
அவர்க்குதவா கஞ்சனின்பொருள்.
ஊர்நடுவே நச்சுமரம்
காய்கனிந்து நிறைந்தார்போன்றதாம்.

சுற்றுரவினருடன் அன்புமின்றி
தான்வருத்தி அறம்போற்றாது.
தேடிச்சேர்க்கும் பெரும்பொருளை
பிறர்தாம் பெற்றுநுகர்வர்.

புகழுடன் பெருஞ்செல்வமுடையோரின்
குறுகியகால வறுமையென்பது.
உலகமுய்க்கவல்ல மேகம்
வறுமைகொண்டார் போன்றதாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

அந்திப் பொழுதை தின்ற அல்லல்
அழல் தீண்டி வெந்ததும் போகும் .
ஊழ் உறுத்த அகமறுத் தவன்
அற்றுப் போக அறம் எழும்.

ஐம்பெரும் பூதமும் ஒன்றாய் சேர
அவுணர் அவையம் பாழ்படும் .
மேழியர் உதிர்க்கும் விழி நீர்
வஞ்சகர் வளமை அறுக்கும்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# அதே கண்கள்



நேசித்து நிமிரும் நிழல் போல
நிழலாய் நிலைத்த நினைவுகள்
மௌனம் மகிழ்ச்சியில் மறைந்த
கண்ணீரில் உறைந்த அதே கண்கள்

என்னை பெறாத தந்தை நீ
உன் நெஞ்சில் நீங்காத வடுக்கள்
தானம் செய்த உன் விழிகளில்
காலம் சென்றாலும் மாறாது வெளிச்சம்

உனது சிரிப்பு நிலவாக மின்னும்
உனது பாடம் வாழ்வாக மாறும்
நீ இல்லையென நினைத்த போதும்
உன் நிழல் எனோடு பயணிக்கும்

அரை மணி நேரத்திற்கு ஒருமுறை
என்னிடம் பேசிடும் உன் வழக்கம்
இறைவனிடம் தினமும் கேட்கிறேன்
மீண்டும் அரை மணி நேரம் வழக்கம்

சூரியன் போல சக்தி நிறைந்து
நிழலாக எப்போதும் நிலைத்திருப்பவர்
தன்னலமற்று வாழ்வதை கற்றுத்தரும்
தெய்வத்துக்கு நிகராக வாழும் உயிர்

நம்மை பாதுகாக்க வார்த்தை போதாது
அவரது பார்வை ஒன்றே போதும்
உனது கண்களை பார்க்கும் போது
அன்பும் ஆருயிர் தெரிகிறது


தந்தையின் ஆசீர்வாதம் என்றுமே
வாழ்வில் வழிகாட்டும் தீபமாகும்
தந்தையின் கண்களை பார்க்கும் போது
தேவையில்லை மற்ற எந்த தேவையும்!

கவிஞர் திருமதி சினேஹா வினய், சென்னை

# அது ஒரு பொற்காலம்

சிட்டுக்களாய் நாம்
சிறகடித்துப் பறந்த காலம்
பட்டுச் சட்டைகளோடு
பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்து
கிட்டிப்புல்லும் பம்பரமும்
கிளையொடித்து குஞ்சூடும்
கூட்டாஞ் சோறுமாய்
கூடி விளையாடி மகிழ்ந்த காலம்
அது ஒரு பொற்காலம்!

வேளாண்மை ஊதியும்
கமுகுமரச் சக்கரமுமாய்
ஓயாமல் நண்பர்களோடு
வயல்வெளியில் ஓடிவிளையாடி
ஒற்றைக்கால் நாரையாய்
கெந்தி மிதித்து
நூலிழுத்து பட்டம் விட்ட காலம்
அது ஒரு பொற்காலம்!



பள்ளித்தோழர்களோடு
பட்டாசு கொளுத்தி பயந்தோடி
ஊஞ்சல் கட்டி ஆடிமகிழ்ந்து
ஊரெல்லாம் நடைபயின்று
நாவல் பறித்துண்டு ஊதாக்கலரில்
நாவைப் பார்த்து ரசித்து
விளையாடி மகிழ்ந்த காலம்
அது ஒரு பொற்காலம்!


மூத்தோர் வார்த்தைகள்
முதுமொழி வேதாந்தம் நமக்கு
அழகான கிராமத்து மண் வாசம்
களமைத்து சூடுமிதிக்கையில்
வைக்கோலில் புரண்டெழுந்து
வையகமே வேறேது நமக்கு!

ஒற்றையடிப் பாதைவழியே
ஓடியாடி நாம் மகிழ்ந்த காலம்
இளநீரும் மாம்பழமும்
இளையோர் நமக்காய் காத்திருக்கும்.
நாள் முழுதும் கணினிக்குள்
நான்கு சுவருக்குள் அவருலகம்!

அது ஒரு பொற்காலம்
மீண்டும் வருமா என்ன?

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# வெய்யில்



கோடையின் வெப்பம் கொடையின் சிறப்பே
வாடையி'ன் வசந்தம் வாகையம் சூடுமே
வெய்யிலின் வேட்கை நிழலை நாடுதே
மயிலின் தோகையாய் விரித்து ஆடுதே

தண்ணீர் தேடியே உயிரினம் ஓடுதே
கண்ணீர் வடித்தே கவலையாய் நிற்குதே
சாலையில் மரங்கள் சுருங்கி வளையதே
மாலையில் சந்தோச பூமாலை பாடுதே

இருசக்கர வாகனம் சாலையில் கண்ணையே
கருமையாய் காட்டி வழியையே மறைக்குதே
குடிக்க போதாத குடிநீர் தேவையே
வெடிக்கும் மேகமாய் ஊற்றினாலும் போதாதே

வீட்டில் உறங்க குளிர்சாதனம் சிரிக்குதே
நாட்டில் அதிகம் விற்பதும் அதுவே
குளிர்பான கடையை குளிர்ச்சியென நாடுதே
குடித்த பின்தான் மீண்டும் தூண்டுதே

தண்ணீர் தேடியே உயிரினம் ஓடுதே
கண்ணீர் வடித்தே கவலையாய் நிற்குதே
சாலையில் மரங்கள் சுருங்கி வளையுதே
மாலையில் சந்தோச பூமாலை பாடுதே

வீட்டில் உறங்க குளிர்சாதனம் சிரிக்குதே
நாட்டில் அதிகம் விற்பதும் அதுவே
குளிர்பான கடையை குளிர்ச்சியென நாடுதே
குடித்தபின்தான் மீண்டும் தூண்டுதே

மானுடம் விவசாயம் மகிழ்வாய் செய்தே
பாத்திகளில் நீரைக்கட்டி பயிரை காத்தாரே
செழித்து வளர்ந்த செடியும் மகிழ்ந்தே
செழுமைக் கூட்டி செம்மையாய் திகழுதே

முதிர்ந்த முத்தும் வளைந்து தவழுதே
அறுவடை அழகாய் அறுத்து அடுக்கி
பெரும் செல்வம் தந்ததே விவசாயிக்கே
மரங்களை வளர்த்து மண்ணுயிர் காத்தே
உரமான வாழ்க்கை உயிரோட்டமாய் வாழ்வீர்
மரங்களை வளர்த்து மண்ணுயிர் காத்தே
உரமான வாழ்வில் உயிரோட்ட வாழ்வே
சுத்த காற்றை சுகமாய் பெற்றே
மெத்த நாளும் மகிழ்ந்தே சிறப்போம்

கவிஞர் பி, அன்பழகன். கடலூர்

# பெருந்தேடல்

கொண்டாடும் நேசகர்களை எல்லாம்
ஒவ்வொன்றாய் இழந்தேன்

காலவிருட்சம்
என் காதல் இலைகளை
உதிர்த்து கொண்டே இருக்கிறது



பழுத்தும் பழுக்காமலும்
உலர்ந்தும் உலராமலும்
சருகான கதைகளில்
பசுமையை எழுதிய
கனாந்தரம் எத்தனை

தழுவிய காற்றில்
தகிக்கும் வெயிலில்
ஆகாய முகிலில்
இரவின் நிலவில்
தாகித்தழும் உள்ளம்
அவர்களைத் தேடி

ஒரு போதும் நிகழப் போவதில்லை
என்றறிந்தும் தேடியழுது
துக்கிக்கும் இதயத்தை
என்னதான் செய்வேன்

உனது விருப்பத்திற்குரியவர்
உன்னைத் தவிர்க்கும் வகையில்
உணரும் போது
நொறுங்கியுடையும் வலியானது
மிகக்கொடியது
இதயத்தைக் அறுத்தும்
அரிந்தும் கூறு போடும் துயரம் தருவது

ஆயினும்
நீ என்னைத் தேட மாட்டாயா என்பதே
என் பெருந்தேடலாக இருக்கிறது

கவிஞர் மரூ ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# நீ மட்டுமே எனக்கு

உன் முகத்தை கண்டபோது
என்னுள் உணர்ந்த
உயிர்ப்பு!
என்னை நீ அணைத்தபோது
என்னுள் பரவிய
உற்சாகம்!
உன் காதலால்
என்னை மாற்றி
உன்னுடனே வாழ்ந்திட
வைத்து அழகு பார்த்திடும்
உன் வெள்ளந்தி மனதும்
கள்ளங்கபமில்லாத
சிரிப்பும்
என்றும் எனக்கே!
என புரிய வைத்து
என்னுள் வாழும்
என்னவனே!



கவிஞர் ஜெனீ கிரேஷி, திண்டுக்கல்



அகர முதல

# தூக்கு கயிறும் அதீத அன்பும்

கயிறு
நினைக்கிறது
என்னால்தான்
அவன்
கீழே விழாமல்
இருக்கிறானேன்று.

பாவம்
அதற்கு தெரியாது
அதனால்தான்
அவன் உயிர்
அவனை விட்டு
பிரிந்ததென்று.



கவிஞர் நாகசுடர் சித்திரை பாண்டி, கூடங்குளம்

# கண்ணீர்

பிறந்து, வளர்ந்து, படித்து
வேலைக்கு செல்வது எல்லாம்
ஒருவருக்கு
அடிமையாக இருப்பதற்கு தானா?
காலங்கள் மாறினாலும்
கதறல்கள் குறையவில்லையே.
பிறர் சுமத்தும் பழி நிக்கவில்லையே.
இதற்கெல்லாம்
கண்ணீர்தான் தீர்வோ.



கவிஞர் மோனீஷா, தி. மலை

அச்சமும் மகிழ்ச்சியும்
நள்ளிரவில் நடை போட்ட நினைவு.
இசையால் காதுகளும் தூக்கத்தால்
தோள்களும் இணைந்த பயண நினைவு.

விடுதியும் பொய்யும் கைகோர்த்து
காதல் சின்னத்தை கண்முன் நிஜமாகிய நினைவு.
கலங்கரை விளக்கத்தின்
உச்சியில் கரங்களை இறுக்கி கோர்த்த நினைவு.

இருக்கைகள் அற்ற தொடர் வண்டியின்
படிகளில் காற்று வாங்கிய நினைவு.
கடல் அலைகள் கால்களை தழுவியதில்
ஈரமாய் ஒட்டிக்கொண்டது உன் நினைவு.

நடைப்பயணம் முதல் தொடர் வண்டி பயணம் வரை
ஒன்றிணைந்த நட்பின் நினைவு.
எண்ணற்ற பயணங்களை நினைக்க
அதனை கடக்க மனம் கனக்க.

தனிமையின் உச்சத்தில் தோழியின்
நினைவலைகளில் சிக்கி தவிக்கிறேன்.
நினைவுகளின் பிரமிப்பு தனிமையில்
தனிமையை தோற்கடித்தது.



அன்பின் ஆரவாரம்!
இன்பத்தின் ஈர்ப்பு!
உற்சாகத்தின் ஊர்வலம்!
எல்லையற்ற காதல்!
ஏராள பயணம்.

காதல் தோழியின் பாறை மனதில் ஈரக்காதல்

கவிஞர் பவித்ரா அச்சுதன் (ஆரணி)

# பிஞ்சு விரல்கள்

வாழ்வில் வண்ணம் சேர்க்க
வந்த தளிர் விரல்கள்!
நெஞ்சில் மிதிக்கும்
பூந்தளிர் பாதங்கள்!
நம்மைப் பிரதி எடுத்து
வந்தது போல் பாவனைகள்!
நம் சிறு வயது நினைவுகளை
நமக்கே அறிமுகப்படுத்தும்!
பிள்ளைகளைக் காண முடியாத
காலமின்மையை சரிகட்டிடும்!
பாட்டியின் அழகையும்
தாத்தனின் அறிவையும்
தாராளமாய் தன்னிடத்தே
கொண்டு பிறந்து
பரம்பரையின் நீட்சியாய்
நம்மைவழி நடத்தும்
பிஞ்சு விரல்கள்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# கண்ணாடிப் பூக்கள்

கண்ணாடி பூக்களும் கறை படிந்ததோ
மாணவ உலகம் மாயம் ஆனதோ
பெற்றவளும் கண்ணீரோடு பெற்று வளர்த்தாளே
காலத்தின் கோலமா காகிதத்தில் எழுதியவன்
கையில் ஆயுதத்தோடு கைதி ஆகின்றானா
விதியின் விளையாட்டா விவேகம் கொண்டானா
உனக்கே அறியா உலகத்தைப் பார்த்தாயா
விஸ்வரூபமாய் எடுக்கும் விசித்திரமான எண்ணத்தில்
விபரீத வில்லங்கமும் வில்லத்தனம் ஆகியதா
கற்கும் வயதில் கல்லும் ஆயுதமா?
தண்டிக்கும் போது தங்கம் ஆகிறான்
பிரம்பு எடுக்காமல் பித்தன் ஆகிறோம்
ஆசிரியர் நிலை ஆறாய் போனதோ
எங்கே செல்கிறது இந்த வையகம்




கவிஞர் ஆ. மிதுலா


# உன் அசைவுகள்

உன் ஒவ்வொரு அசைவுகளும்
என்னுள் ஓராயிரம் முறை
ஆனந்த தாண்டவம் ஆட வைக்கிறது



கவிஞர் புன்னகை தூரன் இரா. சங்கர், ஈரோடு

பசியாய் இருப்பவனுக்கு
போஜனம் உண்பிப்பீர்.
ஆடை இல்லாதவனுக்கு
ஆடை போர்த்துவீர்.
தாகம் உள்ளவனுக்கு
விடாய் தீர்ப்பீர்.
அந்நியனை அன்புடனும்
நேசத்துடன் அரவணைப்பீர்.
வியாதியுள்ளவனைக் கண்டு
ஔடதம் கொடுப்பீர்.
சிறியோருக்கு சிறியோனாயும்;
பெரியோனுக்கும் சிறியோனாயும் ;
அந்தகார இருட்டில் சிறு தீபமாய்
ஒளி வீச
நித்திய ஜீவனை
சத்தியமாகவே அடைவீர்கள்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு

# என் மகன்

கவிப்புலமையினை பெயரில் பெற்றவன்
என்னை ஒட்டுமொத்த குத்தகையாய் ஆள்பவன்
விட்டில் பூச்சியின் ஒளிக்கு சொந்தக்காரன்
சத்தம் இல்லாமல் சிறகடிக்கும் பட்டாம்பூச்சியானவன்
காது மடல் ஓரத்தில் குடை காதனவன்
பொன் சிரிப்பில் உலகை ஆள்பவன்
சிறு நடையால் என்னை ஆள்பவன்
வெண்பனியால் என்னை மகிழ்வு ஊட்டுவான்
வானவில்லாய் எனக்கு காட்சி அளிப்பான்
ஒற்றைச் சொல்லைக் கொண்டு தந்தி அடிப்பான்
திறன் பேசிக்காக அடம் பிடிப்பான்
அழுதாலும் அணைத்தாலும் புன்னகைப்பான்
கூட்டணியில் என்னை கழட்டி விடுவான்
கற்பேன் என்ற பெயரில் விட்டிசைப்பான்
காதோரம் ரகசியத்தை சத்தமிட்டு உரைப்பான்
ஏதேனும் ஒரு இரவில் என்னுடன் சண்டையிடுவான்
பார்த்த போதெல்லாம் ஒற்றை சொல்லால்
என்னை மூழ்கடிப்பான் முத்தத்தின் எண்ணிக்கையை
மூச்சுட்டு உரைப்பான் கையெழுத்துக்கும்
இவனுக்கும் வெகு தூரம்
பாசத்தில் இவனுக்கு நிகர் யாருமில்லை
ஊட்டி விடும்போதும் கையசைப்பான்
அதட்டி உரைக்கும் போது கண் வியர்ப்பான்
பாவம் என்றால் ஒரு நாள் விடுப்பு என்பான்
கொஞ்சலிலும் தாலாட்டினை கேட்பான்
தங்க மயிலு ராஜா பாட்டு அம்மு புஜ்ஜி
என் உயிர்... உம்மா... என்றுரைக்க
புன்னகையால் என்னை வீழ்த்தி
பிறவியை அர்த்தமுள்ளது ஆக்குவான்
என் மகன்



கவிஞர் முனைவர் ச. அரியநாச்சியம்மாள், கோபிச்செட்டிப்பாளையம்

# யானை

காடுகளின் கம்பீரம்
யானைகளின் பாதயாத்திரையில்
அழகின் அடையாளமாய்

காடுகள் இன்று காணமல்
போனதால் யானைகள் தெருவோரங்களில்
உணவு தேடும் பரிதாபங்களாய்

பிரமாண்ட உருவம் அரிசி
தேடும் பிச்சைக்காரனாய்
இரவின் மடியில் கிராமங்களில்



சாலையை மறித்து உணவு
தேடும் யானையின் தேடல்கள்
இயற்கையின் கண்ணீராய்

மனிதனின் கண் அசைவில் பிச்சை
எடுக்கும் யானைகளின் பலம்
பலவீனமாய்

காடுகள் தொலைத்து இயற்கையை
தின்னும் மனிதா உன்னால்
விலங்குகள் இன்று விபரீதங்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நிலவாய் ஒரு ஏக்கம்!



தூரத்து நிலவாய் நீயும்
உன்னை கடக்கும் மேகமாய் நானும்
அமாவாசையான நம் வாழ்வும்
பௌர்ணமியாகாததால் வந்த ஏக்கம்

கரையென நிலைத்த நீயும்
உன்னை தழுவிடும் அலையாக நானும்
இணையாத கரை அலையாய் நம் வாழ்வும்
பிரிவோடு தவித்திடும் ஏக்கம்

பூவாக மலர்ந்திடும் நீயும்
உன்னில் படிந்த பனியாக நானும்
உருகி பிரியுதே நம் வாழ்வும்
உன்னை சேர முடியாத ஏக்கம்

நதிநீராக செல்லும் நீயும்
அதில் தேங்கிடும் கல்லாக நானும்
சேர்ந்து பயணிக்கயிலாத நம் வாழ்வும்
பிரிந்து தவிப்பதே ஏக்கம்

கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம்

# மங்கல மாலை

காதலன், காதலிக்காக ஒளிந்திருப்பதாய்
செங்கதிரின் மொத்த அழகையும்
மேற்கில் மறைத்துக் கொண்டு
மேகத்திரை செறிந்தமையால்
மாயமாய் மறைகிறான் வெய்யோன்.

இருள் நிறைந்த அறைக்குள் ஒளிரும் மெழுகாய்
வெள்ளொளியைப் பூமியெங்கும் வீசிக் கொண்டு
தான் வந்து விட்டதாய் சேதி சொல்கிறாள் மதி.

மங்கை அவளை ஆசீர்வதிக்கிறாள் போல
மலர்கள் மெல்ல வீழ்த்திய இதழ்களை
பார் எங்கும் பரவச் செய்கிறது மெல்லிசைக் காற்று.

மாலைப் பனியில் மல்லிகை மணம் சிதற,
மேகங்களின் தூறல்கள் குளங்களிலே வளையல் வரைய
மஞ்சள் மாலை, மணம் வீசும் மங்கள நாளாய்.
காதல் மணமழையில் தொடங்கும் அழகிய கனாகாய்.



கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

என்னை என்னிடமே
திரும்ப அனுப்பி விடு
என்னை உன்னை விட
நன்றாக பார்த்துக் கொள்வேன்,
என்னை மீட்கவும்,
பாதுகாத்துக் கொள்ளவும் ,
இந்த உலகில் என்னைவிட
சிறந்த ஆள் யாருமில்லை.

இப்படிக்கு
இயற்கை.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

# யாரது நினைவில்

மனம் மறுத்தும்
மயக்கம் தீரவில்லை
உன் காதல் வலைக்குள்
சிக்காத மீனாய்

நாடகம் தானோ
நாள்தோறும் நடக்குது
விசும்பித் திரியும்
மனதின் வெந்தணலில்

விலகாதே என்ற
உன் பார்வை துரத்தலுக்கு
பதிலேது இங்கே

குறுகுறுத்த ஒசைக்கூட
குனிந்து கொண்டது
உன் காத்திருப்பின் வயதை
உன் வெள்ளிப் பூக்களின் சிரிப்பு
சொன்னது

யாருக்கு யாரோ என்று
யார் எழுதியது
பிடிவாதக் கூற்றுக்கு
சாயம் பூசிய சத்தங்கள்

காத்திருப்பு
காலம் மாறியும் கட்டிச் சுமக்கும்
கோட்டையை அசைக்காமலே
அசத்தும் மர்மங்கள்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# பசுத்தோல் போர்த்திய புலி

நஞ்சொன்றை நாவில் தீண்டும்
நாகப்பாம்பின் விஷம் "நீ" மனிதா?
விரும்பி தீண்டுவதில்லையே
விஷம் கொண்ட நாகமும்.
மதி இழந்த கணங்களில் வசனங்கள்
பல பேசி மனதை கிழித்தாய்.
ஆறாத வடுக்கள் அழியாது இருக்க
மற(றை)ந்து போகுமா மனிதா?

பட்டும், பகட்டும் அணிந்து
பாசாங்கு செய்கிறாய்.
பசுவின் உருவமல்ல "நீ" மனிதா
நடுங்க வைத்து மிரள வைத்து
சுகம் காண்கிறாய்.
கழுத்தை நெரிக்கும்
புலியின் குணம் தான் "நீ" மனிதா!

ஈரக்குலை அறுக்கும் ஈனச்செயலில்
ஈன்றவளுக்கு பெருமை சேர்க்குமா மனிதா?
தரங்கெட்ட செயலில் தன்னிலை மறந்தாய்.
நம்பி கெட்ட நிலையில் உனக்கு
நற்பெயர் நிலைக்குமோ மனிதா?

நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மனிதனை நினைத்து விட்டால்
அஹிம்சை வழியில் அமைதி காத்தது போதும் என்று
ஆவேசம் பொங்க உன்னை
தண்டிக்க துடிக்கிறது மனிதா.

ஊரில் உண்டு பல அபலைகள்
உள்ளத்தில் சுமக்கும் கவலைகள்.
துணிவுடன் எதிர்கொள்ளும்
ஓர் நாளில் உண்மை வெளிப்படும்
"நீ "பசுத்தோல் போர்த்திய புலி என்று.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

அலை அடிக்கும்
மணல் வீடுகள்
கண் கசக்கி
ரசிக்கும் குழந்தை
அலைபேசி விளம்பரம்

மனதின் தூய்மை
குழந்தையின் ஊஞ்சலானால்
ஆட்டும் கயிறு
ஆண்டவனின்
புன்னகையாகும்

மழலை பேச்சின்
இலக்கண பிழையில்
மொழி
தன்னை திருத்திக்கொள்கிறது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நினைவு திரும்புமா?



காரிருள் களைந்திட
தினம்தினை தனைவருத்தி
பிறநலவாதியாய்
நீயென்ஜாதியாய்
கனாவெழுதும்வோலையாய்
சித்திரத்தேராய்
மங்கையின் மன்மதனாய்
என்உயிர்உதிரமாய்
நவரசசித்திரமாய்
கம்பன்காணா இரத்தினமாய்
நோய்தீர்க்கும் தெய்வமாய்
யென் உயிர்காத்தஉறவுமாய்
அனைத்தும் நீயாதுமாய்

உறவுஇன்பமாம்
பிரிவுகொடியதாம்
நினைவுகள்பொக்கிஷமாம்
கண்ணின்விழியோர
அலைதட்டும்பொழுதெல்லாம்
உன்நினைவே!

என்நினைவது திரும்பாதோ?
வாழ்வது செழிக்காதோ?

கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# தழைக்கும் விவசாயம்



இடி மின்னல் காத்துனு ஓயாத மழை
மண்டைய பிளக்கும் வெயிலு மயக்கம் வர பாக்குது
இயற்கை சீற்றங்கள் ஆயிரம் வந்தாலும்
ஏழை மக்க வாழ்வு உழைச்சாதான் சோறு.

விஞ்ஞான வளர்ச்சிகள் ஆச்சரியத்தின் உச்சங்கள்
விலைவாசி நிலையோ விஷமா ஏறுது
பொருளாதார வளர்ச்சியிலே நம் நாடு முன்னேறுது
வல்லுனர்கள் பேட்டி எல்லாம்  செய்தியா வருது.

பொருளாதாரம் புரட்சி எல்லாம் விவசாயிக்கு தெரியாது
அண்டா குண்டா அத்தனையும் அடகு வச்சி விவசாயம்
அறுவடை முடிஞ்சா தான் உண்மை விளங்குது.

அசல் கூட தேறாத விவசாயமே வாழ்வு என
*சேத்துல மூச்சடக்கி* மூழ்கிறான் விவசாயி
உற்பத்தியில நம் நாடு உச்சமுன்னு
பெருமையா ஊரெல்லாம் சொல்றாங்க.

வட்டி குட்டி போட்டு விவசாயின் கடன் ஊட்டிய நெரிக்குது
வெண்மை புரட்சியாம் பசுமைப் புரட்சியாம்
எம் விவசாயி வாழ்க்கையோ பொருளாதாரத்தில் வரட்சியே.

உயிர் தொழில் விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுக்கனும்
விவசாயியும் விவசாயமும் தலைநிமிரும் காலமே
தரணியே உயரும் தழைக்குமே விவசாயம்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

உள்ளக் கிடத்திலே
ஏதோ ஒரு உந்து சக்தி.
அதன் வெளிப்பாடே
கலை என்னும் பொக்கிஷம்.
மனிதனின் பல திறமையின் வெளிப்பாடே !
ஓவியம் முதலான கலைகளின் செயல்பாடே!
எண்ண ஓட்டத்திற்கு பாடல்களே சான்று!
ஆகாச விட்டத்திலேயே எண்ணற்ற
மாயாஜாலங்கள், நட்சத்திரக் கூட்டங்கள்.
பாறை ஓவியம், குகை ஓவியம் பல நாடுகளின்
வேட்டை காட்சிகள். ஓவியம், இசை, நடனம்,
கட்டிடக்கலை சிற்பங்கள் பக்குவப்பட்டு
கலைகள் கொண்டாடப்படுகின்றன.
பின்தங்கிய நாடுகளிலும்
கலைகள் பேசப்படுகின்றன.
கலை நுணுக்கங்களை வெளிப்படுத்த
டாவின்சி ஒரு விடிவெள்ளியே!
இத்தாலியும், பிரான்சும் ஏனைய நாடுகளும்
கலையான உலகம் வளம் பெற்றதே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# கேள்விக்குறி

வெய்யோனின் முகந்தனை அறியாது
உலகமே இருண்டதாய் உறங்கிட
தாமதமான விழிப்பில் தாறுமாறாய் வசைகளும் விழ
சோம்பேறி என்ற ஏச்சும் பேச்சும் எழ

உடற்பயிற்சி இன்றி உடலும் பருமனாக
தண்ணீரும் மறந்து சிறுநீரகமும் பழுதடைய
படித்த படிப்பும் அறிவும் உறக்கத்திலே தொலைந்திட
பாழாய் போன போதையும் தலைக்கு மேல் ஏறிட



அலைபேசியும் வந்தது அலைக்கழித்திட
சூதாட்டமும் உடன் சேர்ந்தது துணையாக
சின்னத்திரை வெள்ளித்திரை என்று
தொலைக்காட்சியும் அலறித் துடிக்க

வண்ணமயமாய் வலம் வர
வேண்டியவரோ வழியின்றித் தவிக்க
உடன் கற்ற நண்பர்களும்
உத்தியோகத்தில் உன்னதமாய் முன்னேறிட

வேலையுமில்லை காசுமில்லை என்று
நடு நெற்றியில் சுளீரென அடித்தது ஞாபகமும் தாமதமாய்
நேரத்தைத் திங்கும் பட்டதாரி கரங்களில்
வாழ்வும் கேள்விக்குறியாய்

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

இனியென்ன பிரிந்துவிடலாமென
நீ கேட்கிறாய்.
என்ன என அதிர்வலை பிறந்தாலுமே
ஹா சரி என பதில் தருவதைத்தவிர வேறென்ன செய்ய.

உன்னால் முடியாது இனியொரு முறையேனும்
என்னை தொடர என நீ உணர்ந்தால் உறைத்தாய்.
என்னால் முடியாது உன்னோடு பேசாமலென
நானுரைத்து தக்க வைக்க எனக்கொண்டும் பிடித்தமில்லை.

வலித்தானே அது அதுவாக ஓர்நாள் புரிந்துக்கொண்டு
உன்னைப்போல பிரிந்து சென்று விடும்
அதுவரை அனுபவித்தே தான் ஆக வேண்டும்.

என்னாலும் சொல்லாமல் தீண்டலாகும்
நெஞ்சின் வலியோடு நினைவாகும் நீ.
என்றேனும் தொலைந்தொரு தூரமாகிடும்
நீயே மாறிப்போக நினைத்தாய் என்னை பிடிக்காமல் தானே.

அப்போது உன் நினைவுமட்டும் எப்படி இருக்கும்
காற்றில் அசையும் இலைகள் போல
நசிந்த நினைவும் தளர்ந்தாடுது

தோற்று போனவைகளோடு போட்டி போட்டு
என்ன செய்யும் இந்த வலிகள்.

விழிகள் மட்டும் கசியும் எந்நாளும்
அதுமொரு நாள் வற்றி போக
வெற்றி கொண்டதாய் சிரிக்கும்.



கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# அன்பில் நான் முட்டாள்

இப்போதெல்லாம்
மனிதரைப் போலவே
மனச்சாட்சியையும் நம்பமுடிவதில்லை.

இங்கு நாம்
வடிவமைக்கப்படுகின்றோம்
சிலருக்காக நாமும் நமக்காக சிலரும்.

என்
பாரமான நினைவுகளை
ஆங்காங்கே பதித்து வைக்கிறேன்
சுமக்க முடியாத கணத்தினால்.



தொலைந்த
இடத்தில் தேடுகிறேன்.
கிடைத்த இடத்தில்
தொலையவில்லை.

மின்னுவதெல்லாம்
பொன்னல்ல
பனித்துளிகள்.

அறிவின் வழியில்
நான் பெரும் ஞானி.
அன்பின் விழியில்
நான் மாபெரும் முட்டாள்.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

எப்போதும் நினைவுகளில் நிறைந்திருக்கும் தருணம்!
வானத்தின் வாழ்த்தாக வந்திறங்கும் மழைத்துளிகள்!
மகனை மிதிவண்டியில் அமரவைத்து தள்ளிச்செல்லும்
தந்தையின் தலையில் தொப்பியொன்று மழைத்தடுப்பாய்!
இடுப்பில் துணியொன்று சமர்ப்பணத்தின் அடையாளம்!
மகனின் கையில் இலைக்கொத்து குடைபோல
அகமகிழ்வை அளிக்கின்ற விளையாட்டுப் பொருளாக!
இயற்கையை இரசித்தபடி மிதிவண்டிப் பயணம்
காற்றுக்கு மாசினை சேர்க்காமல் நிகழும்!
இளமையும் முதுமையும் இணைந்ததொரு பயணம்!
இளமையும் முதுமையும் வாழ்க்கைச் சுழற்சியில்
எல்லோர்க்கும் உண்டென்று உணர்த்திடும் பாடம்!
பள்ளிப் பருவத்தில் மகிழ்ச்சியுடன் திகழுமிவன்
நாளை பெற்றோரைக் காத்திடும் நற்பிள்ளை!
மழையால் மண்குளிர அன்பால் மனம்குளிர
இழையோடும் பாசம் எந்நாளும் தொடரட்டும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ

# யாருக்கு வேண்டும் சட்டம்?

வானைத் தொடும் மேகத்திற்கும்
மழை நீரைப் பொழியும் வானுக்கும்
இரவில் ஒளி தரும் நிலவிற்கும்,
கரையைத் தொட்டு செல்லும் கடல் நீருக்கும்,
பகலில் விரும்பிய படி ஒளித்தரும் சூரிய பகவானுக்கும்,
புல்வெளியில் ஒளிந்திருக்கும் பட்டம் பூச்சிக்கும் ,
சிறகை விரித்து பறக்கும் பட்சிகளுக்கும்,
தென்றலாய் வருடும் குளிர் காற்றுக்கும்,
மனிதனை கண்டவுடன் குறைக்கும் நாய்க்கும்,
எங்கே உண்டு சட்டம்? யாருக்கு வேண்டும் சட்டம்?
தேவையடா, நீதி இல்லாத மானிடா உனக்கு என்றுமே.



கவிஞர் முர்ஷிதா பேகம், இலங்கை

# புயலுக்கு பின்னே அமைதி

வங்கக் கடலில்
காற்றழுத்தத் தாழ்வுமையம்

சுழன்று சுற்றிச்
சூறைக் காற்றாய்

கரைதாண்டிய கட்டுமரமாய்
கூரைக் குடிசைகளை

அடித்துத் துவைத்துத்
தூரத்தில் பிசாசாய்



சுருட்டி விசியதில்
கந்தலாய்க் கிடக்கிறது

கோரைப் புற்களாய்
சிதறிய கிராமம்

தாகத்தில் தவித்து
கண்ணீர் குடித்து

மிச்சத்தில் புயலுக்கு
பின்னே அமைதி

கவிஞர் யாழிசைச்செல்வா

யார் சொன்னது?

சொன்னதை
கேட்டுக்கொண்ட பிறகு
'சரி'
என்ற ஒற்றைவார்த்தை
எப்பொழுதும்
'உடன்பாட்டில்' மட்டும்
வருவதில்லை.

கட்டுப்படுத்தும் நிலையில்
உள்ளவர் சொல்வதால்

நட்பும், உறவும்
சிக்கலின்றி
தொடர நினைப்பதால்

புரிந்துகொள்ளும் நிலையில்
சொல்பவர் இல்லை
என்பதாலும் தான்.

****

வார்த்தைகளை மாற்றி

இதை செய்யாதே
அதை செய்
இந்தயோசிப்பு தவறு
அப்படி யோசி
இதுதான் சரியாய்வரும்



எதனால்
செய்ய வேண்டும்
செய்யக்கூடாது
சரியாய் செய்தால்
என்ன கிடைக்கும்
இல்லை எனில்
என்ன ஆகும்
என காரணங்களையும்
விளைவுகளையும்
உதட்டு வார்த்தைகளாய்
மாற்றினால்

கேட்பவருக்கு
சலிப்பு மாறி
பேச்சை உற்றுநோக்கும்
சம்பவம் நிகழும்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

நச்சென்று வைத்தாய்
முத்தமென இனித்தது
தலையில் கொட்டு
*

சிரிப்பாயிருக்கிறது
உன்னிடம் தொலைய
என்னைத் தொலைத்தது
*

இருள் கூட
வெளிச்சமே
அவளைச் சுமக்கையில்
*

நினைவுத் தடாகத்தில்
நீ வராத போது
நீந்தியென்ன பயன்
*

யாகம் செய்கிறேன்
அன்பைத் தேடித்தான்
நீ கிடைப்பாயென
*

உன் வேர்வைத் துளிகளை
சேமிக்கிறேன்
ஆயுளை நீட்டிக்க.
*

இதழ்க்கதவுகளுக்குள்
பூட்டுகிறாய் என்னுயிரை
முத்தச்சாவி கொண்டு.
*



விழித்திருந்தும்
விழி திறக்கவில்லை
முத்தம் பதியும் வேளை
*

பசியேறுகிறது
பார்வையால் பரிமாறியும்
உன் முத்தச்சோறு
*

வானம் அழுதபடி
விண்ணப்பிக்கிறது உன்னிடம்
வானவில்லைக் கொடு
*

ஒரு பக்கப் புத்தகம் நீ
ஒவ்வொரு முறையும்
புதுப்புது அர்த்தம்

கவிஞர் இளையவன் சிவா

இசை நீ
இசைய நான்
விசை நீ
அசைய நான்
***

போராடு
சரண் என்பது
முரண்
***

எந்த எழுத்தையும் அழிக்காதே
அது எண்ணத்தின்
பரிணாமம்
***

2014 ல் என்ஜினீயரிங் முடித்தேன்
8 வருட பணி அனுபவம் கொண்டுள்ளேன்
மாத சம்பளம் 10593 ரூபாய்
சென்ற மாதம் கொரோனாவால் 8593
இந்தியா வல்லரசு ஆக வாய்ப்பில்லை போலும்
***

லாக்டவுன் - ல் வருமையுற்று வாடிய
குடும்பமொன்றை இன்று கண்டேன்.
மனதின் வெறுமை உச்சத்தை தொட்டது.
இந்திய குடிமகனாய் பிறந்தமைக்கு தண்டனை.
***

ஆதனம் ஆனதும்
மாறும்
மனிதன்
***



உண்மையில் தவறு செய்ததற்கு
குற்ற உணர்ச்சி இல்லாதவன் மட்டுமே
குற்றவாளி
***

அவள் அஞ்சனத்தை வைத்தே
அவள் கண்ணை
ஓவியமாய் வரைய வேண்டும்
***

இளைஞர்கள்
ஆன்மீகத்தை வெறுப்பதில்
ஆச்சரியம் ஏதுமில்லை
***

உப்புநீர்
உலக பந்து
நல்ல நீரை வீணாக்காதே

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

அத்தியாயம் 7 "யாதவ் இல்லையா?" (புதினம்)



பத்மினி அத்தை வீட்டிற்கு போவதை அறிந்தால்.... எங்கே உன் காலில் நிற்கப் போவதாகச் சொல்லிவிட்டு அத்தையின் முந்தானையில் போய் முழந்தாள் போட்டுக் கொண்டிருக்கிறாய் என்று அப்பாகண்டிப்பாக கேலியாக கேட்பார்.என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது போரிவிலி ரயில் நிலையம் தாண்டி யாதவ் டெய்ரி சென்டருக்கு வந்தான். கடை வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. யாதவின் தந்தை லால் கல்லாவிலிருந்து சிரித்துக் கொண்டே "க்யா அரசு ..க்யா சாஹியே" என்று கேட்டார்.

"யாதவ் இல்லையா?" என்றன் அரசு.

"அவனுக்கு இன்றைக்கு பொண்ணு பார்க்க எல்லோருமாகச் சேர்ந்து பத்லாபூருக்குப் போயிருக்காங்க. ஏதாவது அவசரமென்றால் மொபைலிலே பேசு. நம்பர் இருக்குதா? இந்த மொபைலிலே டயல் பண்ணித் தரட்டுமா?" என்று கேட்டார்.

"சும்மா அவனைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று தான் வந்தேன்" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் யாதவின் தந்தையின் மொபையில் சப்திக்க "யாதவ் உன் நண்பன் அரசு வந்திருக்கிறான். பேசுகிறாயா?" என்று கேட்டார்.

"ஹாய் அரசு. என்னைத் தேடி வந்தது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. உன் பண பலம் எங்கே.... காலேஜிலே திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாய். வசாயிலிருந்து போரிவிலிக்கு எப்படி வந்தாய் என்பதே எனக்கு ஜீரணிக்க கஷ்டமாக இருக்கிறது. சரி என்ன விஷயம் சொல்லுப்பா?" என்றான் எதிர் முனையில் யாதவ்.

"யாதவ் நீ ஒருமுறை யார் வேண்டுமனாலும் தொழில் ஆரம்பிக்கலாம் என்று சொன்னாயே நினைவிருக்கிறதா?", "ஆமாம்..."
"அத்தோடு ஃபாஸ்ட் ஃபுட் தொழில் ஆரம்பிப்பது மிகவும் சுலபம். முதலீடு மிகக் குறைவு கூட என்று கூறினாய். ஞாபகம் இருக்கிறதா?", "ஆமாம்.அதற்கென்ன?"

"நான் செய்யலாமென்றிருக்கிறேண்டா" என்று அரசு சொன்னதும் எதிர் முனையில் விழுந்து விழுந்து சிரிக்கும் சப்தம் கேட்டது., "ஏன் சிரிக்கிறாய்?" முகம் சிவந்தவாறு கேட்டான் அரசு.

கவிஞர் இராஜகை நிலவன்

அத்தியாயம் 7 "யாதவ் இல்லையா?" (புதினம்)

"உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா?" என்றான் எதிர்முனையில் யாதவ்.

"ஏண்டா... ஒரு சிறிய வியாபாரம் ஆரம்பிக்கலாம் என்று சொன்னால் பைத்தியம் பிடித்து விட்டதா என்கிறாய்?"

"நீ கோடி கோடியாக பணம் போட்டு தொழில் செய்ய வேண்டியவன். இங்கே வந்து எங்கள் தொழிலிலே கை வைக்கப் பார்க்கிறாய்."

"அரசு இன்றைக்கு ஜே.கே. இன்டஸ்டிரீஸ் ஒரு நாளைக்கு முழுக்க இயங்காமல் போனால் மும்பை மாநகராட்சிக்கு ஏறக்குறைய நாலரைக்கோடி நட்டம் ஏற்படும். அப்படிப்பட்ட கம்பெனியின் அதிபர் நீ.... இங்கே வந்து ஃபாஸ்ட் புட் ஆரம்பிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு...போ... போ...போய் வேலையைப் பார். யாரிடமும் இப்படி பேசாதே. நாளைக்கே டைம்ஸ் ஆஃப் இந்தியா பேப்பரில் ஜே.கே.இண்டஸ்ட்ரீஸ் அதிபரின் மகன் தமிழரசுவிற்கு மூளைக் குழம்பி விட்டது என்று செய்தி போட்டு விடுவார்கள்." என்றது எதிர்முனை.

அரசு அமைதியாகி விட "நான் இங்கே பொண்ணு பார்க்க வந்திருக்கிற காரணமே அப்பவினுடைய சம்பாத்தியத்தை நம்பித்தான். எல்லா அப்பாவும் பிள்ளைகளுக்காகத் தான்டா சம்பாதிக்கிறாங்க. போ, போய் உங்க அப்பாவோடு சேர்ந்து ஜப்பானில் ஏதோ ஒரு மின்காந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப் போறதா சொன்னாங்களே ... அதை ஒழுங்காக கவனிக்கப் பாரு. கோடி கோடியா புரளும்.

"சும்மா அஞ்சிக்கும் பத்துக்கும் அடிச்சிக்கிற இந்த வியாபாரத்திற்கு ஏண்டா நீங்களெல்லாம் வரணும். சரி, நேரிலே பேசலாம். அப்ப நிறைய பேசலாம்." என்று ஹிந்தியிலே சொன்ன எதிர்முனை "போனை அப்பவிடம் கொடு " என்றது.

லால் பேசி முடித்து விட்டு "என்ன அரசு ஏதாவது சாப்பிடுகிறாயா? யேய் பாய்... சாப்கோ ஏக் சிக்கன் சூப் தோ" என்று ஆர்டர் கொடுத்தார்.

சாப்பிடலாம் போல வயிறு பசித்தது. இருந்தாலும் "ஒன்றும் வேண்டாம் லால் சாப். அப்புறமாக யாதவ் இருக்கும் சமயத்தில் வருகிறேன்." என்று சொல்லி விட்டு வெளியே வந்து வாசுதேவனின் காரில் ஏறிக்கொண்டான்.

"எங்கே நேரே வீட்டுக்குத்தானே" என்று கேட்டான் வாசு.

## அத்தியாயம் 7 "யாதவ் இல்லையா?" (புதினம்)

ஏதோ எண்ணத்திலிருந்த அரசு "என்ன என்ன வாசு.. என்ன கேட்டாய்" என்று கேட்டான்.

"என்னடா பகல் கனவு காண்கிறாய்? நேரே வீட்டுக்குத்தானே போக வேண்டும்" என்று கேட்டான்.

"அது.. வந்து... இல்லை என்னை வசாய் ரெயிவே ஸ்டேசனிலே இறக்கி விட்டுவிடு. ஒரு சின்ன வேலை இருக்கிறது" என்றான் தமிழரசு.

ஸ்டேசன் வந்ததும் அரசு இறங்கிக் கொள்ள கார் புறப்பட்டுச் சென்றது.

வயிறு பசியால் துடித்தது. எங்கே போவது என்று யோசித்தபோது "சாப்..." என்று ஒரு பிச்சைக்காரன் வந்து கைநீட்ட அவனை அறியாமல் சடைப் பையில் கையை விட ஒரு ரூபாய் நாணயம் தட்டுப் பட்டது. எடுத்துப் பிச்சைக்காரனிடம் போட "நீ மகராசனா இருக்கணும்" என்று வாழ்த்தி விட்டுப் போக, தமிழரசுக்கு சிரிப்பு வந்தது.

ஒரு கணம் 'வீடு திரும்பிவிடலாமா?' என்று கூடத்தோன்றியது. 'ம்கூம் ஒருமுறை கங்கணம் கட்டி தனியாக என் காலில் நின்று வென்று காட்டவேண்டுமென்று முடிவெடுத்தாகி விட்டது.
முன் வைத்தக் காலை பின்னால் வைப்பது முறையாகாது. என்ன செய்யலாம்' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது ''என்ன அரசு யோசனை பலமாக இருக்கிறது" என்று கேட்டான் தீபக் சிவ்டே.




தொடரும்...


கவிஞர் இரஜகை நிலவன்

# விடியலை வெளுக்கும் கிழக்கு

## வாசிப்பு அனுபவம் — கவிதைத் தொகுப்பு

**முத்தையா மோகன்**
**வெளியீடு அன்பு நிலா பதிப்பகம் வந்தவாசி**
**முதல் பதிப்பு செப்டம்பர் 2024**
**பக்கம் 128 ; விலை ரூபாய் 140**

சிவப்புச் சிந்தனைக்குள் எளியோரின் வாழ்க்கைப்பாடுகளை காட்சிப்படுத்தும் தொகுப்பு.




கவிஞர் முத்தையா மோகன் எழுதியிருக்கும் விடியலை வெளுக்கும் கிழக்கு நூலின் அனைத்து கவிதைகளும் அடித்தட்டு மக்களையும் அவர்களின் அன்றாட வாழ்க்கைப்பாடுகளையும் படம் பிடித்து காட்டி அதன் வழியே தேசத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தையும் எடுத்துக்காட்டி இருக்கிறது. சாதியின் தீவிரத்தாக்கம் வறுமையின் வேதனைகள் வளமையைப் பயன்படுத்த முடியாத போக்கு அரசியலின் தாக்கத்தால் விடியாத வாழ்வின் நிலைமை என சகல தளங்களுக்குள்ளும் விரியும் பார்வையில் பொதுவுடைமைச் சிந்தனைகளே முன்நின்று பேசுகின்றன.

பருவ கால மாற்றங்கள் புவி வெப்பமயமாதல் கார்ப்பரேட் கம்பெனிகளின் நீட்சி அரசுகளின் நிலை இல்லாத கொள்கைபிடிப்புகள் என தொடர்ச்சியான தாக்குதல்களில் துவண்டு போய் உழவையும் உணவையும் மறந்து சொந்த ஊரை விட்டு நகரத்தில் பஞ்சம் பிழைப்பதற்காக இடம்பெயரும் விவசாயிகளும் கூலிகளும் அதிகரித்து வரும் இன்றைய சூழலில் இந்த தொகுப்பின் கவிதைகளும் அவர்கள் பாடுகளை எடுத்தியம்பி வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன

"எத்தனையோ உயிர்கள்
எரித்தும் புதைத்தும் கூட
எவனெவனும் எதற்காகவும் வருந்தியதே இல்லை

கவிஞர் இளையவன் சிவா

சாதிகளை எரித்ததாகவோ மதங்களை புதைத்ததாகவோ ஒருபோதும் நடந்ததில்லை
கூறுகெட்ட குதர்க்கங்கள்
எரியூட்டி பின் சாம்பலாகும்
ஏகபோக தகன மேடைகளில் எப்போதும் எரிந்துருகுவது மனிதங்கள் மட்டுமே..."

சாதியும் தீண்டாமையும் இன்னும் எத்தனை எத்தனை உயிர்களை காவு வாங்க காத்திருக்கின்றன என்ற வேதனையின் வெளிப்பாடு இந்த வரிகள் மனிதம் பேசும் மனங்களையும் கருணையும் அன்பும் கொண்டு நடமாடும் மக்களையும் எரித்து விடும் சாதியை எரிப்பதற்கு சட்டமும் மனமும் இன்னும் தயாராகவில்லையே என்ற கவிஞரின் உள்ளக்கிடக்கை இந்த கவிதையின் வழியாக வெளிப்படுகிறது

"தாகங்கள்

பக்தியும் முத்தியும்
அன்பில் அடங்காது போனால் சந்தனக் காடுகளைச்
சூழ்நிறை சாக்கடைகளை
எங்ஙனம் அகற்றுவது?"

உயிருடன் இருக்கும் மனிதனை மேன்மை அடைய வைக்காமல் அவனின் வறுமையை விரட்டி விட்டு சமூக நீரோட்டத்தில் அவனையும் தலை நிமிர வைத்து நடை போட வைக்காமல் இன்னும் அடிமைத்தனத்திற்குள்ளும் அன்றாட பாடுகளின் ஏக்கத்திற்குள்ளும் சுழலவிடும் கடவுளின் மீது கோபம் வருகிறது. எத்தனையோ பரிகாரங்கள் எத்தனையோ வேண்டுதல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன கடவுளின் இருப்பிடமும் வறுமையின் வழித்தடமும் என்பதை வெளிச்சம் போட்டு காட்டிவிடுகிறது வரிகள்.

"அன்பின் அணை

நரகல்களைத் தின்று
பருக்கைகளைத் துப்பும்
ஆடையற்ற நாகரீகம்
ஆசுவாசப்பட முடியவில்லை அன்பிற்கும் அணைகட்டும் ஆணவங்கள் கண்டு.."

அன்பை அடக்கியபடி அலையும் நாகரீகத்தின் வளர்ச்சிப் போக்கில் வீக்கமே

தெரிகிறது. உணவுப் போக்கும் உறவின் துண்டிப்பும் கண்டு கொள்ளப்படாத அமைதியும் காணாமல் போகும்போது மனிதப் பார்வைகள் ஆணவத்தின் பின்னே அலைந்து கொண்டிருக்கின்றன.

"கடித்த குற்றத்திற்காக
சாகும் வரை மரணம்
பாவம் கொசு

வாங்கிய காசுக்கு
வகையாய் மாரடிக்கும்
வாக்குச்சீட்டு

பூகம்ப பேரிடர்கள்
திருந்தாத ஜென்மங்கள் சுயநலப்பித்து

கடைசிப் பயணம்
கூடவே செல்ல வேண்டி இருந்தது
நண்பனின் மரணம்

அணிவகுத்து நிற்கும்
கவிதைப் புத்தகங்கள்
பள்ளிச் சிறார்கள்

பொதுக் கழிப்பறையில்
கெட்டக்கெட்ட வாசகங்கள்
சிந்தனைக் கழிவுகள்""

சமூகத்தின் மீதான பெரும் கோபத்தை குறுங்கவிதைகளின் வழியே முழுமையாக வெளிப்படுத்திவிட முடிகிற தருணங்களை நூலின் நிறைய பக்கங்களில் வெளிப்படுத்துகிறார்.

"காற்றை மறி..

செருப்பு தைக்கவும்
நெருப்பிட்டு புரட்டிடவும்
மட்டுமே என்றார் தோழா!
காற்றை இடைமறி
கனவை நினைவாக்கு தோழா!

கலப்பைப் பிடித்து நாம்
கழனி செய்வதில்
தவறுண்டாமோ தோழா!
கலப்பைப் பிடிப்பவன்
பிறர் காலில் விழுந்திடில்
மன்னிக்க இயலுமா தோழா!

காலச்சுழற்சியை
மாற்றி அமைத்திடு தோழா!
கொண்ட கோலம் வென்றிட எண்ணித் துணிந்திடு தோழா!"

அலைகள் ஓயப் போவதுமில்லை கடலுக்குள் செல்வதற்கான பயத்தை நாம் விடப் பவதுமில்லை என்பதைப் போல அடிமைத்தனத்தை இன்னும் எத்தனை நாள்தான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அதிலிருந்து வெளியேற வேண்டும் என்றால் காற்றையும் மறித்து கேள்வி கேட்கப் பழகுவோம் என்ற வீரத்தையும் வேகத்தையும் விதைக்கிறது இந்த கவிதை. உழவனை உயர்த்திப் பிடிக்கும் வரிகளில் பிறர் காலில் விழுவது இழுக்கென்பதையும் எடுத்துரைப்பதில் தனிக்கவனம் பெறுகிறது வரிகள்.

"ரேகைகள்

படிக்க வசதியற்ற
மாணவச் செல்வங்களுக்கு
அடுப்பில் பூனை தூங்கும்
ஊனர் குடும்பங்களுக்குப்
படித்து வேலை தேடும்
இளைய சமூகத்துக்கு
நிலங்கள் ஏதுமற்ற
விவசாய குடிமக்களுக்கு..
திட்டங்கள் ஏதேனும் கூறி
வரி வசூல் கேட்டு வாங்க
தருகிறேன் என்றார் அப்பா வந்தோரின் முகங்களில்
அழிக்கவே முடியாத
கோடான கோடி
இயலாமை ரேகைகள்."

எப்படியாவது விவசாயத்தை மேம்படுத்தவும் கல்வியின் வீரியத்தை கடைக்கோடிக்கும் கடத்திட வேண்டும் என்ற விவேகமும் ஒருசேர பொதுநலத்தின் பின்னே நம்மையும் நடைபோட வைக்கின்றன.

"அம்மாவுடன் நானும்...

வீதியில் பிச்சைக்காரன்
பத்துப் பைசா கேட்டான்
அவனை அலட்சியப்படுத்திவிட்டு வீட்டிற்கு சென்றேன்
வீட்டில் அம்மா
பெருமிதத்தோடு
அழுது கொண்டிருந்தாள்
என்ன விஷயம் என்றேன்
என் தங்கை
வயதுக்கு வந்து விட்டாளாம் அம்மாவுடன் சேர்ந்து
நானும் அழுதேன்
காரும் ஸ்கூட்டரும்
கை நிறைய பணமும்
கூடவே ஒரு வேலையும் கேட்டு எத்தனை பிச்சைக்காரர்கள்
என் வீடு தேடி வரப்
போகிறார்களோ என்று."

காலம் காலமாக பெண் பிள்ளையைப் பெற்றவர்கள் அனுபவிக்கும் துன்பத்தின் நீட்சியாகத் தான் இந்த கவிதை விளைந்திருக்கிறது. ஆண்டுகள் பலவாயினும் இன்னும் மாறாத வரதட்சணையும் தொடரும் பெண்கள் மீதான விலைபேசலும் குடும்பத்தையும் இன்னும் ஓடிக்கொண்டே இருக்க வைக்கிறது. அறிவு சார்ந்த விஷயங்களும் சமூகம் சார்ந்த பொது புத்தியும் பெண்மையை விலை பேசிக்கொண்டே தான் இருக்கின்றன.

உலகத்தின் சகல உயிர்களுக்கும் விடியலைக் கொடுக்கும் கிழக்கு இங்கே எல்லோரது விடியலுக்கும் வெளிச்சமிடும் சூரியனாக ஓயாது எரிந்து கொண்டிருக்கும் நெருப்புப் பந்தாக எல்லோருக்குள்ளும் பேரன்பை விதைக்கும் மனிதமாக விளைந்து நிற்கிறது. சமூகத்தின் சகல நோய்களுக்கும் நிவாரணத்தை தேடும் அக்கறையில் விளைந்திருக்கும் இந்த கவிதைகள் போகிற போக்கில் வாசித்து மறந்துவிடும் வெற்று வரிகளாக அல்லாமல் நினைத்தபோதெல்லாம் சிந்தனையின் வழியே ஏதேனும் ஒரு இலக்கை அடையத் தூண்டும் பாதையாக வழிகாட்டும் ஒளி விளக்காக அமைந்து விடுகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

# நாளை நமதே

## விழயல் என்பது

## கிழக்கில் அல்ல

## நம் உழைப்பில்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே　　　　முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு　அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு　சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa　www.aagaramuthala.com　aagaramuthala@gmail.com